கல்லூரி அமைய காரணமாக இருந்த சேகர்பாபு!

முதல்வர் உரை.... முதல் பக்கத் தொடர்ச்சி

உங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகதான் 'நான் முதல்வன்' என்கிற ஒரு அற்புதமான திட்டம். அரசுப் பள்ளியில் படித்துவிட்டு கல்லூரிகளில் சேருகின்ற மாணவிகளுக்கு, 'புதுமைப்பெண்' என்ற திட்டத்தின் மூலம், மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு இரண்டு நாட்களாக நீங்கள் பத்திரிகைகளிலும் பார்த்திருப்பீர்கள், தொலைக்காட்சியிலும் பார்த்திருப்பீர்கள். படிப்பதற்காகவும், வேலை பார்ப்பதற்காகவும், வெளியூர் செல்ல வேண்டும் என்றால், பெண்கள் பாதுகாப்பாக தங்கிக் கொள்ள வசதியாக இப்போது 'தோழி விடுதிகள்' என்று விடுதி ஆரம்பித்திருக்கிறோம். குடும்பத் தலைவிகளாக இருக்கின்ற உங்கள் அம்மா மற்றும் சகோதரிகளுக்கு வருகிற செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளிலிருந்து மாதந்தோறும் 1000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அதையும் வழங்கப் போகிறோம்.

மாணவர்கள் உயர்ந்த இடத்திற்கு வருவதே எனக்கு பெரும் மகிழ்ச்சி!

இப்படி ஒவ்வொரு கட்டமாக பார்த்துப் பார்த்து திட்டங்கள் தீட்டி உதவி செய்து கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு நீங்கள் எல்லோரும் நன்றாக படிக்க வேண்டும். இன்னும் சில ஆண்டுகள் கடந்து, எங்கேயாவது ஒரு இடத்தில், ஏதாவது ஒரு சூழ்நிலையில், ஏதாவது ஒரு தருணத்தில் என்னை நீங்கள் சந்திக்கும்போது, "உயரமான பதவிகளில் இருக்கிறோம். இவ்வளவு பெரிய ஆளாகி விட்டோம்" என்று பெருமையோடு சொல்லும் அளவுக்கு அந்தச் சூழ்நிலை ஏற்பட்டால் அதைவிட மகிழ்ச்சி வேறு எதுவும் எனக்கு இருக்க முடியாது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதைத்தான் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கண்ட கனவுகள். அவர்கள் கண்ட கனவு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நிறைவேற்றுகிறான் என்பதில் எனக்கு பெருமை. இதைவிட பெருமை எனக்கு வந்து சேரமுடியாது.

நீங்கள் பெருமை அடைவது ஒரு பக்கம் இருந்தாலும், எனக்கு அதைவிட முக்கியம் எது என்று கேட்டால், நீங்கள் படித்து உங்கள் பெற்றோரை பெருமை அடைய வைக்கவேண்டும்! இந்த தாய்த் தமிழ்நாட்டை பெருமை அடைய வைப்பதற்கு கல்விதான்! கல்வியை யாராலும் திருடவே முடியாது. அதுதான் நிலையான சொத்து. நீங்கள் எல்லோரும் நன்றாக படியுங்கள் என்ற வேண்டுகோளை மட்டும் இந்த நேரத்தில் வைத்து, சாதிக்க முடியாத சாதனைகளை எல்லாம் நீங்கள் சாதித்துக் காட்டவேண்டும் என்ற அந்த வேண்டுகோளையும் வைத்து, இப்படிப்பட்ட ஒரு சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் தொடக்கத்தில் சொன்னதுபோல, ஒரு எனர்ஜி மட்டுமல்ல, இன்னும் பல பணிகளை ஆற்ற வேண்டும் என்ற அந்த உந்துதலையும் இந்த நிகழ்ச்சி எனக்கு வழங்கிக்கொண்டு இருக்கிறது. இப்படிபட்ட நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிகழ்ச்சியை மிகுந்த எழுச்சியோடு, ஒரு பாச உணர்வோடு, ஏற்பாடு செய்திருக்கின்ற இந்துசமய அறநிலையத் துறைக்கும், குறிப்பாக நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி கூறிக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2023) கொளத்தூரில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி, அக்கல்லூரியில் பயிலும் 685 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி கட்டணம் ரூ.10,000/மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை வழங்கி, விழா பேருரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., இந்துசமய அறநிலையத் துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ. குமரகுருபரன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர். க.வீ. முரளீதரன், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர். பி. விஜயகுமார் ரெட்டி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொளத்தூர் தொகுதி : ரெட்டேரியில் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையம்! கபாலீசுவர் கல்லூரி மாணவர்களுக்கு நிதியுதவி!

சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ 6.32 கோடி மதிப்பில் கூடுதல் கட்டிடம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஆக. 1-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2023) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அகரம் மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.6.32 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டி, கொளத்தூர்ரெட்டேரியில் ரூ.21.39 கோடி செலவில் 1 கோடி லிட்டர் திறன் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்து, கொளத்தூர் ஏரியில் ரூ.7.30 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்படுத்தும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களையும், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்!

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், அகரம் மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தற்போது 931 மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், 6 கோடியே 32 இலட்சம் மதிப்பீட்டில் 18 வகுப்பறைகள், தலைமையாசிரியர் அறை, ஆசிரியர்கள் அறை, அலுவலக அறை, மொழி ஆய்வகக் கூடம், தையல் பயிற்சிக் கூடம், மனையியல் ஆய்வகக் கூடம், அறிவியல் ஆய்வகக் கூடம், நூலகம், கழிப்பறைகள், வாகனம் நிறுத்துமிடம், என தரைத் தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 2,371 சதுர மீட்டர் பரப்பளவில் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டும் பணிக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து, பள்ளி மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களையும், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பரிசுப் பொருட்களையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். பின்னர், பெரம்பூர், லூர்து மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவியர்களின் கோரிக்கையை ஏற்று, இசைக்கருவிகள் வாங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கினார்.

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்!

திரு.வி.க.நகர் மண்டலம், ஜவஹர் நகரில் அமைந்துள்ள கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள், கல்வி உதவி, பயனாளிகளுக்கு மருத்துவ உதவி, திருமண உதவி, மாவு அரவை இயந்திரங்கள், இஸ்திரி பெட்டிகள், மீன்பாடி வண்டி, என மொத்தம் 130 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

கொளத்தூர் அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்

சென்னை, கொளத்தூரில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி, அக்கல்லூரியில் பயிலும் 685 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி கட்டணம் ரூ.10,000/ மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை வழங்கிடும் அடையாளமாக 20 மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கல்வி கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கினார்.

இக்கல்லூரியில் B.Com., B.B.A., B.C.A., B.Sc. Computer Science ஆகிய 4 பாடப் பிரிவுகளும், சைவ சித்தாந்தம் சான்றிதழ் வகுப்பும் பயிற்றுவிக்கப்படுகிறது. கடந்தாண்டும் 480 மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொளத்தூர் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்தல்!

கொளத்தூர் ரெட்டேரி 200 அடி சாலையில் அமைந்துள்ள கொளத்தூர் ஏரியில் நீர்வளத்துறையின் சார்பில் 7 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஏரியினை ஆழப்படுத்தி கரைகளை மறுசீரமைக்கும் பணிகள் மற்றும் உபரிநீர் கால்வாயினை மேம்படுத்தும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கொளத்தூர் ரெட்டேரியில் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்தல்!

கொளத்தூர் ரெட்டேரி 200 அடி சாலையில் அமைந்துள்ள சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் நீர் பகிர்மான நிலையத்தில், ரெட்டேரியில் உள்ள நீரினை சுத்திகரித்து குடிநீராக்கும் திட்டத்தின் கீழ், 21 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 1 கோடி லிட்டர் திறன் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

ஏரியின் நீர் புதியதாக அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நவீன கரைந்த காற்று மிதப்பிலான (Dissolved Air Flotation) தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சுத்திகரிக்க ப்படுகிறது. அடுத்து, இரண்டு நிலை திட வடிகட்டிகள் மூலம் சுத்திகரிக்கப்பட்டு, இறுதியாக குளோரினேஷன் செய்து பாதுகாப்பான குடிநீர், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படும். இத்திட்டத்தில், நீர் சுத்திகரிப்பிற்காக ஏரியில் மிதக்கும் நீர் உந்து நிலையம், புதிய நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் 1.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குமரன் நகர், வேலவன் நகர், பெரியார் நகர், ஜவகர் நகர், திருப்பதி நகர், கம்பர் நகர், அஞ்சுகம் நகர், ஜி.கே.எம். காலனி, செம்பியம் மற்றும் பல்லவன் சாலை ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 1 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

இந்த நிகழ்ச்சியில், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆர்.கிர்லோஷ் குமார், இந்துசமய அறநிலையத் துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் க.வீ. முரளீதரன், கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் பி. விஜயகுமார் ரெட்டி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ராபா புக் ஆப் வேல்ட் ரெக்கார்ட்ஸ் குழுமம் சார்பில் உலக சாதனை விழா மற்றும் கலாச்சார விழா காரம்பாக்கம்,போரூர் வேலம்மாள் வித்யாலயா பள்ளியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கழக இலக்கிய அணி தலைவர் புலவர் இந்திரகுமாரி தலைமை வகித்து,பல்வேறு சாதனையாளர்களுக்கு விருது வழங்கினார். இதில் சென்னை, கோயம்பேடு காவல் துணை ஆணையர் பி.குமார் கலந்து கொண்டார். வேலம்மாள் வித்யாலயா பள்ளி முதல்வர் வித்யாரத்னா திருமதி அன்னி ப்ரீத்தாமேரி அறிமுக உரையாற்றினார்.ராபா மீடியா குழும நிறுவனர் ஆர். பிரசன்னா வரவேற்புரையாற்றினார். கலாரத்னா ஜானி மாஸ்டர் வாழ்த்துரை வழங்கினார். வித்யா ரத்னா திருமதி விஜயலட்சுமி காமேஸ்வர் நன்றி கூறினார். வி. கார்த்திகா,திலகவதி பங்கேற்றனர்.

இன்று முதல் மேலும் கடைகள் விரிவுபடுத்தப்படுகிறது

500 ரேஷன் கடைகளில் குறைந்த விலையில் தக்காளி விற்பனை!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, ஆக.1-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று (31.07.2023) தலைமைச் செயலகத்தில் தக்காளி விலை யேற்றம் தொடர்பாக கூட்டுறவுத்துறையின் உயர் அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

பின்னர், செய்தியாளர்களை சந்தித்த கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்ததாவது :

இந்த ஆண்டு கோடையில் கடும் வெப்பம் நிலவியதால் விவசாயிகள் தக்காளி பயிரிடுவது கணிசமாக குறைந்ததாலும், அண்டை மாநிலங்களில் இருந்து தக்காளி வரத்து குறைந்ததாலும், ஜூன் மாத இறுதியில் வெளிச்சந்தையில் தக்காளியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.100120 வரை உயர்ந்தது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தக்காளி விலை யேற்றத்தை கட்டுக்குள் கொண்டுவர பல்வேறு நடவடிக்கைகள் கூட்டுறவுத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் படி, எனது தலைமையில் 27.06.2023 அன்று தலைமைச்செயலகத்தில் தக்காளியின் விலை யேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு கூட்டுறவுத் துறையின் கீழ் சென்னையில் செயல்படும் 27 பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 2 நகரும் பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 28.06.2023 முதல் தக்காளி கிலோ ஒன்றுக்கு ரூ.60/ என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தொடர்ந்து ஜூலை முதல் வாரத்திலும் அண்டை மாநிலங்களில் இருந்து தக்காளியின் வரத்து குறைவாக இருந்ததால், வெளிச்சந்தையில் தக்காளியின் விலை கட்டுக்குள் இல்லை. எனவே, மீண்டும் 03.07.2023 அன்று தலைமைச்செயலகத்தில் தக்காளியின் வெளிச்சந்தை விலையை கட்டுப்படுத்த ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. அதன்படி, சென்னையில் முதற்கட்டமாக வடசென்னையில் 32 நியாயவிலைக்கடைகளிலும் மத்திய மற்றும் தென் சென்னை நியாயவிலைக் கடைகளில் தலா 25 என மொத்தம் 82 நியாயவிலை க்கடைகளிலும், மாநிலத்தில் பிற பகுதிகளில் 215 நியாயவிலைக்கடைகளிலும் என மொத்தம் 302 நியாயவிலைக் கடைகள் மூலம் 04.07.2023 முதல் தக்காளி கிலோ ரூ.60/க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

28.06.2023 முதல் 05.07.2023 வரை சென்னையில் 15 மெட்ரிக் டன் தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தற்போது, அண்டை மாநிலங்களில் பெய்த கனமழையினால் தக்காளி விளைச்சல் குறைந்ததால், தக்காளியின் வரத்து குறைந்து காணப்படுகிறது. இதனால் மீண்டும் வெளிச்சந்தையில் தக்காளின் விலை உயர்ந்துள்ளது. இந்நிலையை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் பாதிப்படையாமல் தடுக்கும் வகையில், முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, தற்போது தமிழ்நாடு முழுவதும் தக்காளி விற்பனை 302 நியாயவிலைக்கடைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாளை (01.08.2023) முதல் தக்காளி விற்பனையை 500 நியாயவிலைக்கடைகளுக்கு நீட்டிப்பு செய்ய முடிவுசெய்யப்பட்டுள்ளது.

அதன்படி, அரியலூர் மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 15 நியாய விலைக் கடைகளிலும், சென்னை மாவட்டத்தில் 100 நியாயவிலைக் கடைகளிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 20 நியாயவிலைக் கடைகளிலும், கடலூர் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், தருமபுரி மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், ஈரோடு மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், கரூர் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், மதுரை மாவட்டத்தில் 20 நியாயவிலைக் கடைகளிலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், நாமக்கல் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், நீலகிரி மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், பெரம்பலூர் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், இராணிப்பேட்டை மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், சேலம் மாவட்டத்தில் 20 நியாயவிலைக் கடைகளிலும், சிவகங்கை மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், தென்காசி மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், தேனி மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், திருச்சி மாவட்டத்தில் 20 நியாயவிலைக் கடைகளிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், திருப்பத்தூர் மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், திருப்பூர் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், திருவாரூர் மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், வேலூர் மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், விழுப்புரம் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், விருதுநகர் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும் என தமிழ்நாடு முழுவதும் 500 நியாயவிலைக் கடைகளில் இன்று (01.08.2023) முதல் தக்காளி கிலோ ஒன்றுக்கு ரூ.60/ என்ற விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.



விளைச்சல் குறைவே காரணம்!

இந்த விலையேற்றத்திற்கு காரணம், விலைச்சல் குறைவு மற்றும் அண்டை மாநிலங்களில் வரத்து குறைவே ஆகும். இது ஒரு இயற்கையான விலையேற்றமே தவிர, செயற்கையானது அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தக்காளி விலையினை கட்டுக்குள் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜகநாதன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் நா.சுப்பையன் ஆகியோர் உடனிருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நாஞ்சில் கி. மனோகரன்

ஆகஸ்ட் 1 (2000)

பெரியாரின் பெருந்தொண்டராய், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாய், தலைவர் கலைஞர் அவர்களின் ஆருயிர் இளவலாய் திகழ்ந்தவர்.

நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறையும், சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப் பட்டவர். தமிழக அரசின் வருவாய்த் துறை அமைச்சராகவும், கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.

இளம்வயதிலேயே கழகச் சார்பில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். அகில இந்தியத் தலைவர்கள் பலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றவர்.

கழக உடன்பிறப்புக்களிடம் பாசத்தை பொழியும் பழக்கமுள்ளவர். பழகுவதற்கு இனிய பண்பாளர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய பேச்சாற்றலாலும், வாதத்திறமையாலும் 'நாவுக்கரசர்' என அழைக்கப்பட்டவர்.

கழகத்தின் சார்பில் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும்விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்.

"என் கண்ணீரைக் காண்பதற்கு உனக்கும் ஓர் ஆசை – அதை நிறைவேற்றிக் கொண்டாய் – என் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பாய்!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்

தி.மு.க.